# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 10** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2½ மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழேவரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படுபவர் ரொபர்ட் கால்டுவெல் ஆவர். திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலைநிறுத்தியதில் பெரும்பங்கு இவருடையதே.

இவர் 1814 ஆம்ஆண்டு அயர்லாந்தில் பிறந்தார். இலண்டன் மிஷனரிக் குழுவினருடன் கிறிஸ்துவத்தைப் பரப்புவதற்காக 1838 ஜனவரி 8 ஆம் திகதி சென்னைக்கு வந்து தமது பணியைத் தொடங்கினார். தனது பணிக்குத் தமிழ்மொழி அறிவு முக்கியம் என உணர்ந்த கால்டுவெல் தமிழை முறைப்படி பயின்றார்.

1841 இல் குருப்பட்டம் பெற்ற கால்டுவெல் திருநெல்வேலியிலுள்ள இடையன்குடி என்ற கிராமத்தில் தங்கி 50 ஆண்டுகளாகத் தமது சமயப்பணியுடன் சேர்ந்து தமிழ்ப் பணியும் செய்தார். ஆங்கிலத்தில் “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்னும் நூலை எழுதினார். இதுவே இவருக்கு மிகுந்த புகழை ஈட்டித்தந்தது. தமிழ்மொழி உலகின் முதல் மொழி என்றும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு யாவும் தமிழோடு பிற மொழிக்கலப்பினால் உருவானவை என்று கூறினார். இவை யாவும் தமிழ்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை எனச் சான்றுகளை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தி உலகம் ஏற்கத் தனது நூல் வாயிலாக விளக்கிச் சொன்னார்.

தமிழக வரலாற்றில், தமிழ் வரலாற்றில் மிகப்பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கியது இவரது நூல். தமிழர்கள் உள்ளத்திலும் உலகளவில் தமிழ் பற்றி ஆராய்ந்த அறிஞர்களின் உள்ளத்திலும் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சிய நூல் இதுவே.

திருநெல்வேலியில் பணியாற்றிய காலத்தில் சங்க இலக்கியங்களைக் கற்றார். அகழ்வாய்வுகள் செய்து ஈமத்தாழிகள், நாணயங்கள் கட்டிடங்களின் அடிப்படை ஆகியவற்றை வெளிக்கொணர்ந்தார். ஆங்கிலத்தில் “திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொதுவரலாறு” என்னும் நூலை 1881 இல் எழுதினார். தொல்லியல், கல்வெட்டியல், இலக்கியம் ஆகிய மூலங்களிலிருந்து பெற்ற தகவல்களைக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் “முழுமைத்தன்மை பெற்ற தனி நூல்களில் முதன்மையானது” என ரொபர்ட் எரிக் பிரிக்கென்பேர்க் கூறியுள்ளார்.

கால்டுவெல் தமிழில் பரதகண்ட புராதனம், நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் ஆகிய நூல்களை எழுதினார். ஞானஸ்ஞானம், நற்கருணை ஆகிய கட்டுரைகளையும் தமிழில் எழுதினார்.

தமிழ்மொழி மிகச் சிறந்த செவ்வியல் மொழி என்றும் தமிழ்ச் சொற்கள் பல கிரேக்கம், இலத்தீன் மொழிகளில் இடம் பெற்றுள்ளன என்றும் மொழிந்தார். தமிழ் வடமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றல் உடையெதென அழுத்தம் திருத்தமாகச் சான்று காட்டி நிறுவியவர் கால்டுவெல் அவர்களே.

1. ரொபர்ட் கால்டுவெல்லின் பெருமைகள் என்னவென்று நினைக்கிறீர்?

(4 புள்ளிகள்)

2. கால்டுவெல் எங்கே எப்போது பிறந்தார்?

(2 புள்ளிகள்)

3. அவர் எதற்காகச் சென்னைக்கு வந்தார்? எப்போது வந்தார்?

(2 புள்ளிகள்)

4. ‘‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’’ என்ற நூலில் இவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் எவை?. அவற்றின் தாக்கம் எப்படி அமைந்தது. (4 புள்ளிகள்)

5. “திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு” நூல் பற்றி ரொபர்ட் எரிக் பிரிக்கென்பேர்க் கருத்து யாது? (2 புள்ளிகள்)

6. அட்டவணையை நிரப்புக (4 புள்ளிகள்)

கால்டுவெல் அவர்கள்

| ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள் | தமிழில் எழுதிய நூல்கள் | தமிழில் எழுதிய கட்டுரைகள் |
|---|---|---|
| ● | ● | ● |
| | ● | ● |
| ● | ● | |
| | | |
| | | |

7. “திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு” என்ற நூலை எழுத கால்டுவெல்லுக்கு உதவிய மூலங்கள் எவை? (3 புள்ளிகள்)

8. தமிழ் மொழியின் வரலாறு, வளர்ச்சி பற்றி நோக்கும் போது கால்டுவெல்லின் பங்கு என்ன? உமது அபிப்பிராயத்தை எழுதுக. (4 புள்ளிகள்)

BLANK PAGE

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழன்னை திருப்பணி செய்வோமே
தரணிக்கே ஓரணி செய்வோமே
அமிழ்தம் தமிழ்மொழி என்றாரே
அப்பெயர் குறைவது நன்றாமோ?

அன்பு நிறைந்தவள் தமிழன்னை
அருளை அறிந்தவள் தமிழன்னை
இன்பக் கலைகள் யாவையுமே
ஈன்று வளர்த்திடும் தேவியவள்.

மாநிலம் முழுதும் ஓர் சமுதாயம்
மக்களுக் கெல்லாம் ஒரு நியாயம்
தானென அறிஞர்கள் தலைவணங்கும்
தருமம் வளர்த்தவள் தமிழணங்கே.

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத் துறக்காதே
"அமிழ்தம் தமிழ்மொழி" ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்.

(நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை)

1. முதலாவது பாடலில் கவிஞர் கேட்கும் கேள்வி என்ன? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

2. தமிழன்னை எப்படிப்பட்டவள் என்று இரண்டாம் பாடலில் கூறப்பட்டுள்ளது?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. தமிழ் அன்னை வளர்த்த தருமங்கள் எவை? (2 புள்ளிகள்)

4. கடைசிப் பாடலில் தமிழர்களுக்குக் கூறும் அறிவுரை என்ன? (3 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல். 80 – 100 சொற்களுக்கு அமைவாக எழுதவும்.**

உமது தமிழ்ப் பாடசாலையின் இவ்வருடக் கலைவிழாவின் சிறப்புக்களையும், அக்கலைவிழாவில் பங்குகொண்டு நீர் பெற்றுள்ள அனுபவங்களையும் பற்றி அயல் மாநிலத்தில் வாழும் உமது தாத்தா பாட்டிக்குக் கடிதம் எழுதுக.

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல். பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

i. ''உயர்தரச் சான்றிதழ் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுப்பது நன்மைதரும்'' என்ற தலைப்பில் உமது தமிழ்ப் பாடசாலைத் தகவல் தினத்தில் நீர் ஆற்றவுள்ள பேச்சை எழுதுக.

ii. ''தாய்மொழி தமிழின் பெருமை'' என்ற தலைப்பில் சஞ்சிகை ஒன்றில் வெளியிடக் கட்டுரை எழுதுக.

iii. தமிழ் வளர்த்த சான்றோர்கள் வரிசையில் உம்மைக் கவர்ந்த பெரியார் ஒருவரைத் தெரிந்து அவரது தமிழ்ப்பணி, அதனால் மொழியும் நாமும் அடைந்துள்ள நன்மைகள் பற்றி விளக்கிக் கட்டுரை எழுதுக.

| வினா இல | 5 | புள்ளிகள் | 30 | பக்கம் | 13 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தல்**

| பனுவல் 1 (15 புள்ளிகள்) | குறிப்புகளை இங்கே எழுதவும் |
|---|---|
| 1. இங்கே குறிப்பிடப்பட்ட குருடன் எப்படி இருந்தான்? (3 புள்ளிகள்) | |
| 2. தேவதை அவனிடம் கூறிய கட்டுப்பாடு என்ன? (2 புள்ளிகள்) | |
| 3. குருடன் கேட்ட வரம் என்ன? (4 புள்ளிகள்) | |
| 4. இந்த வரத்தினால் அவனது வாழ்வில் என்ன மாற்றங்கள் நிகழும்? (6 புள்ளிகள்) | |

| பனுவல் 2 (15 புள்ளிகள்) | குறிப்புகளை இங்கே எழுதவும் |
|---|---|
| 1. நீர் கேட்ட உரையாடலில் பங்கு கொண்டோர் யாவர்? (2 புள்ளிகள்)<br>__________<br>__________<br><br>2. நண்பர் என்ன கேட்டார்? (2 புள்ளிகள்)<br>__________<br>__________<br>__________<br><br>3. நண்பியின் பிரயாணம் தாமதமானதற்கான காரணங்கள் எவை என அவர் கூறினார்? (4 புள்ளிகள்)<br>__________<br>__________<br>__________<br>__________<br>__________<br><br>4. நண்பன் எத்தகைய கவனக் குறிப்புகளைக் கூறினார்? (3 புள்ளிகள்)<br>__________<br>__________<br>__________<br>__________<br>__________ | |

5. நண்பனின் சிறந்த விருந்தோம்பல் பண்புகளை எப்படிக் கண்டீர்? (4 புள்ளிகள்)